**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09012024-8117

Volume: 9

Issue: 1

Month: July

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.05.2024

Accepted: 25.06.2024

Published: 01.07.2024

Citation:
Boopalan, A. "Influence of Sangam Literature on Cilappathikaaram." *Shanlax International Journal of Tamil Research,* vol. 9, no. 1, 2024, pp. 54–58.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i1.8117

*Corresponding Author:
dr.boopalan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Influence of Sangam Literature on Cilappathikaaram

**A. Boopalan**
*Postdoctoral Research Fellow, Central Institute of Classical Tamil*
*An Autonomous Institution, Ministry of Education, Govt. of India*
*Perumpakkam, Chennai, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0004-2507-7845*

**Abstract**
*The Sangam literature, known as the Eightfold and the tenfold, portrays love and bravery as two major components of life. Although the meaning and form of Sangam songs have changed and developed over time, its influence continues to spread directly or indirectly in literary works, from scriptures to contemporary cinema songs. Therefore, it is not surprising that Silapathikaram and Manimekala, which appeared in the Sanga Maruvya period after the Sangam period, have Sangam characteristics. A student of the Sangam literature can find that the influence of the Sangam literature is deeply rooted in the language and its social practices are gradually changing. Ilangovadikal are noble people who cherish the things spoken by their ancestors as if they were gold. We can know this by playing some customs followed by Sangam literature.*

***Keywords:*** *Silappathikaram, Manimekala, Sangam Songs, Religious Culture, Ilankovadikal.*

**References**

1. Swaminatha Iyer, V.Ve, *Kurunthogai*, Chennai, Kazhaga Vezhiyeedu, Second Edition, 1947.
2. Puliyoorkesigal, *Silappathikaram*, First Edition, 1958.
3. Seyapal, R, Chennai, New Century Book House (Pvt) Ltd., 2004.
4. Dakshinamurthy, *Ainkurunuru Moolamum Uraiyum*, Chennai, New Century Book House (Pvt) Ltd., 2004.
5. Balasubramanian, K.V. *Purananuru Moolamum Uraiyum*, Chennai, New Century Book House (Pvt) Ltd., 2004.

# சிலம்பில் சங்கப் பாடல்களின் தாக்கம்

*முனைவர் ஆ. பூபாலன்*
முனைவர் பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
தன்னாட்சி நிறுவனம், இந்தியக் கல்வி அமைச்சகம்
பெரும்பாக்கம், சென்னை

## முன்னுரை

சங்க இலக்கியம் எனப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் காதலையும் வீரத்தையும் வாழ்வின் இரு பெருங்கூறுகளாகச் சித்தரிக்கின்றன. சங்கப் பாடல்களின் பொருளும் வடிவமும் காலத்திற்கேற்ப மாற்றமும் வளர்ச்சியும் பெற்றாலும் அதன் தாக்கம் இன்றுவரை படைப்பிலக்கியங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ, நீதி நூல்கள் முதல் தற்கால சினிமா பாடல்கள்வரை பரவிக்கொண்டே வருகிறது. எனவே, சங்க காலத்திற்குப் பின்னர் இருண்ட காலம் எனப்படும் சங்க மருவிய காலத்திற்தோன்றிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கச் சாயல் கொண்டவையாய்த் திகழ்வதில் வியப்பில்லை. சங்க இலக்கியச் செல்வாக்கு சிலம்பில் ஆழமாக வேரூன்றியிருப்பதையும் அதன் சமூக நடப்பியலில் இளங்கோ மாற்றம் காண விழைவதையும் சிலம்பினைக் கற்போர் அறியமுடிகிறது.

முன்னோர் மொழிந்து கூறியப் பொருளைப் பொன்னே போல் போற்றும் பண்பாளர் இளங்கோவடிகள். இதனைச் சங்கத் தமிழர் பின்பற்றிய சில பழக்கவழக்கங்களைச் சிலம்பில் சுட்டுவதன் வாயிலாக நாம் அறியமுடிகிறது. மாலைக்கால வழிபாடு இன்று நேற்று தோன்றியதல்ல. சங்கத் தமிழரின் மாலைக்கால வழிபாட்டை,

**"இரும்பு செய்விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது
மல்லல் ஆவணம் மாலை யயர்"**

**(நெடு. 42-44)**

என்று நக்கீரர் பாடியுள்ளார். இவரைப் பின்பற்றியே இளங்கோவும்.

**அகனகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி (9:1-3)**

எனக் குறிப்பிடுகின்றார். பண்டைத் தமிழரிடம் வேனிற்காலத்தில் குளிர்ச்சிக்காகச் சந்தனம் பூசிக்கொள்வதும் வாடைக் காலத்தில் வெப்பம் வேண்டின் இருங்காழ் அகிலொடு வெள்ளியிர் புகைப்பதும் வழக்கமாகக் காணப்பட்டது. இதனை,

**வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப**

**(நெடு. 51-52)**

என்னும் நக்கீரர் கூற்றானும்.

**வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக**

**(4:37-38)**

என்னும் இளங்கோ கூற்றானும் அறியலாம். இன்று சந்தனம் மங்கலப் பொருளாக இறை விழா, மணவிழாவில் இடம் பெற்றாலும் அனைவரும் கைகளில் பட்டும்படாமலும் தொட்டுச் செல்வதையே காண்கிறோம்.

கற்பிற் சிறந்த பெண்டிரை அருந்ததி எனப்போற்றும் பண்டைத் தமிழரின், வழக்கத்திணை

**அருந்ததி அனைய கற்பின்**

**(ஐங்க. 442-4)**

**வடமின் புரையுங் கற்பின் மடமொழி யரிவை**

**(புறம். 122. 8-9)**

**வடமீன்போல் தொழுதேத்த வயங்கி கற்பினாள்**

**(கலி. 2: 21)**

என்னும் சங்க இலக்கியப் பாடலடிகளால் அறியலாம். இளங்கோவும் கண்ணகியும் அறிமுகப்படுத்தும் போதே

**‘தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்’**

***(1:27)***

என்றும், புகார் நகரப் பெண்டிரை,

**‘வடமீன் கற்பின் மனையுறை மகளிர்**

***(5:229)***

என்றும், மகளிரின் கற்பைச் சிறப்பிக்கின்றார்.

மன்னனைச் சான்றோர் நீர்வளம் மிக்க ஆற்று மணலினும் பலகாலம். நீடுழி வாழ்க என வாழ்த்துவது சங்க மரபாகும்.

**பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி**
**முந்நீர் விழவின் நெடியோன்**
**நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே**

***(புறம். 9: 10-11)***

என்றும், சோழன் மாவளத்தான்,

**சிறக்க நின் ஆயுள்**
**மிக்கு வரும் இன்னீர்க் காவிரி**
**எக்கர் இட்ட மணலினும் பலவே**

***(புறம். 43: 21-23)***

என்றும், செல்வக் கடுங்கோ வாழியாதன்,

**புல்லிலை வஞ்சிப் புறமதில் அலைக்கும்**
**கல்லென் பொருநை மணலினும் ஆங்கண்**
**பல்லூர் சுற்றிய கழனி**
**எல்லாம் விளையு நெல்லினும் பலவே**

***(புறம்- 387:33-36)***

என்றும் வாழ்த்திப்பாடுகின்றனர். கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவர் பொழில்வதி பேரெழில் வாழ்க்கையின்போது,

**தீம்புனல் ஆயமாடும்**
**காஞ்சியம் பெருந்துறை மணலினும் பலவே**

***(பதி.48:17-18)***

என்று வாழ்த்திப்படுகின்றான். இளங்கோவும் சேரன் செங்குட்டுவனை,

**மண்ணாள் வேந்தே நின்வாழ் நாட்கள்**
**தண்ணான் பொருநை மணலினும் சிறக்க**

***(28. 125-126)***

என வாழ்த்துகின்றார்.

தொல்காப்பியர் புறத்திணையியலில் போருக்கு வகுத்திருக்கும் இலக்கணத்திற்கேற்ப இளங்கோவும் போர் நிகழ்ச்சிகளைப் படைத்திருக்கின்றார். சிலம்பின் வஞ்சிக் காண்டக் காட்சிக் காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை முதலியனயே புறத்திணை இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாகப் புறப்பாடல்கள் பதிற்றுப்பத்து விளங்குவது போன்று அமைத்துள்ளன.

**வடதிசை மருங்கின் மன்னர் தம்முடித்தலைக்**
**கடவுள் எழுதவோர் கற்கொண்டு அல்லது**
**வறிது மீளும் என்வாய் வாளாகில்**
**குடிநடுக்குறூஉங் கோலேன் ஆகென”**

***(26. 13-18)***

என வஞ்சினம் மொழிந்து செங்குட்டுவன் போருக்குப் புறப்படுவதும்,

**‘வாளும் குடையும் வடதிசைப் பெயர்க்கெனப்’ *(26.33)***

புறவீடு செய்வதும்,

**பெரும்படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு**

***(26:49)***

அளிப்பதும், ஆகிய நிகழ்ச்சிகள் சங்கப் போர்நெறி முறைகளை இளங்கோவும், பின்பற்றுவதை உணர்த்துகின்றன. மேலும், வெட்சித் திணையின் கொடைக்கு எடுத்துக்காட்டாக.

**இளமா எயிற்றி இவைகாண் நின்ஐயர்**
**தலைநாளை வேட்டத்துத் தந்த நல்ஆநிரைகள்**
**கொல்லன் துடியன் கொலைபுணர் சீர்வல்ல**
**நல்லியாழ்ப் பாணர்தம் முன்றில் - நிறைந்தன**

***(12. 15)***

என்னும் வேட்டுவவரிப் பாடல் அமைகின்றது.

போரிலே வென்ற மன்னர் களவேள்வி செய்தல் வழக்கம். இதனைப் புறப்பாடல்களாலும். *(26, 372)*

**ஆண் தலை அணங்கு அடுப்பின்,**
**வயவேந்தர் ஒண்குருதி, சினத்தியிற்**
**பெயர்பு பொங்க**

***தொடித் தோட்கை துடுப்பாக,***
***ஆடுற்றவூன் சோறு" (29-35)***

என்னும் மதுரைக்காஞ்சியாலும் அறியலாம். இளங்கோவும் சேரனின் மறக்கள வேள்வியை,

***... பேயாடு பறந்தலை***
***முடித்தலை அடுப்பில் பிடர்த்தலைத் தாழித்***
***தொடித்தோள் துடுப்பின் துழைஇய ஊன்சோறு***
***மறப்பேய் வாலுவன் வயனறிந்தூட்ட***
***(26:241-244)***

எனப் பாராட்டுகின்றார். போரைத் தொடங்கும் மன்னர்,

***ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்***
***பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்***
***தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்***
***பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்***
***எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்***
***(புறம்- 9:1-5)***

எனப் பறையறைந்து பகைநாட்டாருக்கு எச்சரிக்கை செய்யும் போர் அறமே

***பார்ப்பார் அறவோர் பத்தினிப் பெண்டிர்***
***மூத்தோர் குழலியெனுமிவரைக் கைவிட்டுத்***
***தீத்திறத்தார் பக்கமே சேர்க (21: 53-55)***

என்று அக்கினிக் கடவுளுக்குக் கண்ணகியைக் கட்டளையிடச் செய்கின்றது. நல்லது தீயது பாராமல் அனைத்தையும் விழுங்கும் அக்கினியை நோக்கிக் கண்ணகி கட்டளையிடுவது, அழித்தலிலும் அறநெறி பிறழாத சங்கத் தமிழரின் மாண்பு இளங்கோவின் நெஞ்சத்தில் பதிந்திருப்பதைத் தென்றெனப் புலப்படுத்துகின்றது.

இளங்கோவின் இயற்கை வருணனையிலும் சங்க இலக்கியத்தின் சாயலைக் காணலாம். தினைப்புனம் காக்கச் சென்ற மகளிர் சுனையிலும் அருவியிலும் நீராடிவிட்டு, ஆங்கு மலர்ந்திருந்த மலர்களைப் பறித்துத் தொடுத்து மகிழ்ந்தமையைக் கூறவந்த கபிலர். வள்ளிதழ் ஒண்செங்காந்தள் ஆம்பல் எனத் தொடங்கிப் பரேரம் புழுகுடன் (குறிஞ். 61-96) எனத் தொண்ணூற்றொன்பது வகை மலர்களால் பாமாலை தொடுக்கின்றார். இம்மலர் வருணனை இளங்கோவின் உள்ளத்தை ஈர்க்கின்றது. எனவே, வையை ஆற்றங்கரையை அடைந்த கவுந்தியடிகள். கோவலன் கண்ணகியின் வழிநடைத் துயரும் களைப்பும் நீங்கித் தம் பயணத்தைத் தொடர், சோர்ந்த உள்ளங்களுக்குப் புத்துணர்வூட்ட, குரவமும், வகுளமும் எனத் தொடங்கி, பிடவமும் மயிலையும் பிணங்களில் மணந்த கொடுங்கரை (13:151-159) என மரம், செடி, கொடிகளில் மலர்ந்த மலர்களைக் கண்ணுக்கு விருந்தாக இளங்கோவும் படைக்கின்றார்.

### சங்கப்பாடல்கள் போற்றல்

சங்க இலக்கியச் சொல்லாட்சியைச் சிறு மாற்றங்களுடன் இளங்கோ கையாண்டிருப்பதைச் சிலம்பில் காணலாம்.

***தண்ணான் பொருநை மணலினும் பலவே***
***(அகம்:93.23)***
***தண்ணான் பொருநை மணலினும் சிறக்க***
***(சிலம்பு:28.126)***
***கலிகெழு மரமிசைச் சேணோன்***
***(குறி.40)***
***கலிகெழு மீமிசைச் சேணோன்***
***(சிலம்பு:25.30)***
***"முட்டாச் சிறப்பின்***
***(பட்.218, சில்ம்பு.11:97)***
***உறித்தாழ் கரகமும்"***
***(பட்.218, சிலம்பு.30:64,90)***

என்பன போன்று பல தொடர்களும் அடைமொழிகளும் சிலம்பில் இடம் பெற்றுள்ளன.

### மரபில் வளர்ச்சி

போரில் வீர மரணமடைந்த வீரனுக்கு அவனைப் புதைத்த இடத்தில் கல்நடுதல் சங்ககால மரபு. அது வீரக்கல் அல்லது நடுகல் எனப்படும். சங்க காலத்திலேயே வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெருஞ் சோழனுக்குச் சங்கச் சான்றோர் நடுகல் நட்டு அவன் பெயரும் பீடும் எழுதி, மயிற்பீலி சூட்டி விழா அயர்ந்ததனைப் புறநானூறு 221 பாடல் சித்தரிக்கின்றது. ஒருவனின்

வீரத்திற்கு அடையாளமாகப் போர்க்களத்தில் மாண்டவனுக்கு எழுப்பப்பட்ட நடுகல். இங்கு வடக்கிருந்து உயிர்நீத்த மன்னனின் மனவலிமையை வெளிப்படுத்த நடப்பட்டதை அறிகின்றோம். இவர்களுக்கும் மேலாக இளங்கோ, பத்தினிப் பெண்டிரைப் போற்றுதல் வேண்டும் என்னும் தனது குறிக்கோளைக் கண்ணகிக்குக் கல்லெடுத்து கோயில் எழுப்பும் வாயிலாக நிறைவேற்றிக் கொள்கிறார்.

வேட்டுவ வரியில் கோவலனொடு கண்ணகி செல்லும்போது, தெய்வமேறிய சாலின் வாயிலாக, ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமா மணி (12.49-50) எனப் போற்றுகின்றார் இளங்கோ. மாதரி என்பவளிடம் கண்ணகியை அடைக்கலப்படுத்தும் போது, முற்றும் துறந்த கவுந்தியடிகள், கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது. பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால் (15-113-114) என்று கண்ணகியைத் தெய்வமாகவே காட்டுகின்றார். மேலும், குன்றக் குரவையில் குரவர்கள்,

> **"இவள்போலும் நம்குலக்கோர்**
> **இருந்தெய்வம் இல்லையாதலின்**
> **சிறுகுடியீரே சிறுகுடியீரே**
> **தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே**
> (24. 10,13)

என்று கண்ணகியைத் தெய்வமாகவே ஏற்று வழிபாடு நிகழ்த்துவதைக் காட்டுகின்றார்.

இவ்வாறு சங்க இலக்கிய அகப்பாடல்கள், புறப்பாடல்கள், வரலாறு அறிவிக்கும் பாடல்கள் என பலவகையான பாடல்களை சிலம்பில் ஒப்பிட்டுக் காணும்போது அதே பொருளோடு சில பாடலடிகளை ஆங்காங்கே இளங்கோவடிகள் பயன்படுத்தியமையை காணமுடிகிறது. சங்க காலத்தில் பின்பற்றி போற்றிய மரபுகள், பண்பாடுகள் சில இன்றுவரை பின்பற்றப்பட்டு வருவதையும், சமூக மாற்றங்களையும், பண்பாட்டு வளர்ச்சியையும் அறிய முடிகின்றது.

## சான்றாதாரம்

1. சாமிநாதையர், உ. வே. (பதி), குறுந்தொகை, கழகவெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு - 1947
2. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பதிப்பு: ஜூன்1958.
3. செயபால்.இரா.(உரை.ஆ), அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட், சென்னை, 2004.
4. தட்சிணாமூர்த்தி. இரா. (உரை.ஆ) ஐங்குறுநூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட் சென்னை, 2004.
5. பாலசுப்பிரமணியன். கு.வே (உரை.ஆ), புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட் சென்னை, 2004.